**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

**Published on 14, July-2025** **ISSN:2320-4842 (P) 3049-2688 (O)**

# அகராதியியல் இதுவரை நிகழ்ந்தவையும் நிகழ வேண்டியவையும்



**முனைவர் வெ. முருகன்**
ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கிலம்-தமிழ்
தமிழ்-ஆங்கிலம் அகராதிகளின் ஆசிரியர் &
தொல்காப்பிய மொழிபெயர்ப்பாளர்

*தமிழியல் ஆய்வுகளில் இதுவரை நிகழ்ந்தவையும் இனி நிகழ வேண்டியவையும் குறித்த திரு. பாலகிருஷ்ணன் அவர்களின் இந்த முன்னெடுப்பின் முக்கியத்துவத்தைக் கீழ்க்காணும் நிகழ்வுகள்வழிப் புரிந்துகொள்வது தமிழ் அறிவுலகத்திற்கு நலம் பயக்க வல்லது.*

- *பாணினியின் அஷ்டத்யாயீ மனித அறிவின் உன்னதமான படைப்பு (*a monumental work of human intelligence) *என விதந்துரைக்கும் ப்ளூம்ஃபீல்டு தொல்காப்பியம் பற்றி ஒரு சொல்லும் கூற மாட்டார்.*
- *இணைத்தல் எனப் பொருள்படும் சமற்கிருதச் சொல்லான சந்தியை உலக மொழியியல் புலவழக்காக்கும் அவர் அதனினும் பெரிதும் பொருத்தமான தொல்காப்பியச் சொல்லான புணர்ச்சியை எளிதாகக் கடந்து போவார்.*
- *ஒன்பது முழுப் பக்கங்களில் (326-334) சமற்கிருத மொழியியலை விரிவாகப் பேசும்* Modern Linguistics: An Introduction (OUP, 1989), *தொல்காப்பியத்தை* a book of communicology *என ஒற்றைப் பத்தியில் கூறிச்செல்லும்.*
- *அதே நூல் பர்த்ரஹரி* (AD 450) *இந்தியாவின் முதல் பொருண்மையியல் கோட்பாட்டாளர் எனக் கட்டுரைக்கும்.*
- Sanskrit Indian scholarship served as a model for the rest of India. It was an inspiration for Tolkāppiyar *என்பது உலகின் மொழியியல் புலங்களில் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படும்* R.H.Robins-*இன்* *A Short History of Linguistics* (p 137) *வெளிப்படையாகக் குறிப்பிடுவது.*
- *பெயர்பெற்ற Princeton Encyclopaedia of Poetry and Poetics கூறுவதாவது:* The poetic theories of Sanskrit, the figures, styles and Rasa served as a poetic theory for all the Indian literatures.
- George L. Hart *கூறுகிறார்:* There can be little question that the grammatical system expounded in *Tolkāppiyam* owes much to Sanskrit grammar.

*தமிழாய்வின் அனைத்துத் துறைகளிலும் இனி நிகழ வேண்டியவற்றில் மேற்கூறிய பொய்யான பொதுக் கருத்தாக்கங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இதுவே உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இம்முன்னெடுப்பின் பண்பும் பயனுமாக அமைவதாக.*

*சிந்துவெளியில் கால்கோளிட்டு, இந்தியத் துணைக் கண்டம் எங்கும் விரித்துக் கால்பரப்பி, பாலி, பிராகிருத, சமற்கிருத மொழிகளுக்குத் தாய்மைப் புரவு நல்கி,*

திராவிடக் குடும்பத்தின் மூதாதையாய் விளங்கி, பேச்சு, எழுத்து என இரு நிலையிலும் சிவகலை சான்றுரைக்கும் இரும்புக் காலம் தொடங்கி, கடந்த ஐம்பது நூற்றாண்டுகளுக்கும் மேலாக நீடித்து நிற்பது தமிழ்.

தமிழின் முதல் நூலாக நம்மிடையே வழங்கும் தொல்காப்பியமே 'முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி' இயற்றப் பட்டதாகலின் பண்டைய தமிழ் இலக்கி யத்தின் நெடுக்கமும் வீச்சும் 'தொகுத்தல்' வழிப்பட்டு நிலைப்படுத்தப் பட்ட எட்டுத்தொகை, பத்துப்பாட்டினும் ஆகப் பெரியது. இப்பெருமையின் சான்றுகள் தொல்காப்பியம் முழுதும் ***என்ப, மொழிப, என்மனார் புலவர்*** என 343 இடங்களில் ததும்பி நிற்கின்றன. இன்று நம்மிடையே உள்ள நூல்களை மட்டுமே கருத்தில் கொண்டு நோக்கிடினும் தொல் தமிழ்ப் பனுவல்களின் விரிவும் ஆழமும் வேறொரு மொழி இலக்கியத்தால் எளிதில் எட்ட இயலாதன. இப்பனுவல் களைப் பின்தொடர்ந்த திருக்குறளும் சிலம்பும் மேகலையும் கம்பன் காவியமும் ஆற்றுப்படை, பரணி, உலா என விரியும் இலக்கிய வகைமைகளும் சித்தர்கள், வள்ளலார் செந்நெறிப் படைப்புகளும் இக்காலத் தமிழ் கண்ட புத்துலக ஆக்கங்களும் ஒருசேர அமைந்து தமிழை உலகின் முதல் நிலைப் பேரிலக்கியங்க ளிடையே முந்துறுத்தி அடையாளப் படுத்துவன. இவ்வனைத்தையும் கட்டமைக்கும் சொற்றொகுதி மிகவும் விரிந்து பரந்தது. சொன்மையிலும் பொருண்மையிலும் எம்மொழிக்கும் அறைகூவல் விடக்கூடியது. இச்சொற் றொகையையும் அவற்றின் பொருள் விரிவையும் ஆவணப்படுத்து தலே இன்றைய நமது தலையாய கடப் பாடாகும். இவ்வாறு ஆவணப்படுத்தும் முயற்சியே வரலாற்றுமுறை அகராதி என அழைக்கப்படுகிறது. இன்றுவரை தமிழில் இம்முயற்சி மேற்கொள்ளப் படவில்லை என்பது நம் அனைவருக்கும் மிகுந்த கவலைதரும் ஒன்றாகும்.

வரலாற்றுமுறை அகராதிகளே தமிழ் போன்ற ஓர் ஒப்பில் செவ்வியல் மொழியின் நெடிய மரபுத் தொடர்ச்சி யையும் காலந்தோறும் அதன் சொற் களும் பொருள்களும் உள்ளாகும் மாற்றங்களையும் புத்தாக்கங்களையும் பதிவு செய்யவல்லன. ஆங்கில மொழி யின் ஆகப்பெரிய நூலாக வருணிக்கப் படும் இருபது தொகுதிகளாலான Oxford English Dictionary-இன் முகவுரையில் சர் ஜேம்ஸ் மரே இவ்வகராதியின் உள்ளடக்கம் பற்றி எழுதுகிறார்:

The aim of the Dictionary is . . . (1) to show with regard to each individual word when, how, in what shape, and with what significa-tion, it became English; what development of form and meaning it has since received; which of its uses have in the course of time, become obsolete, and which still survive; what new uses have since arisen. . . and when: (2) to illustrate these facts by a series of quotations.

இத்தகைய வரலாற்று முறை அகராதியையே தமிழ் என்னும் தொல் பழம் செவ்வியல் மொழி வேண்டி நிற்கிறது. நம்மால் இவ்வகை அகராதியை இன்றுவரை உருவாக்க இயலவில்லை என்பது நம் மொழிக்குப் பெரும் பின்னடைவாகும். இம்முயற்சியில் இறங்கிய அறிஞர் வி.ஐ.சுப்பிரமணியம் ஏமாற்றத்தையே சந்தித்தார். சென்னைப் பல்கலைக்கழகம் தன் Tamil Lexicon வழியாகச் செய்துள்ள மிகக் கடுமையான அகராதியியல் குளறுபடிகளை நோக்குக.

தமிழின் ஒப்பில் மொழி வளத்தைக் குறுக்கி வெறும் 10,4,405 சொற்களைத் தெரிவுசெய்து, இவ்வெண்ணிக்கையிலும் 40,000க்கு மேற்பட்ட வடமொழிச் சொற் களைப் புகுத்தி, அதிலும் ***'வடசொற் கிளவி வட எழுத்து ஒரீஇ'*** என்னும் தொல்காப்பியப் பொன்னுரையைப் புறந்தள்ளி, இந்த அகராதி உள்ளடக்கி யுள்ள தலைச்சொற்கள் உபநிடதங்களின் பெயர்களையும் வைதீகக் கருத்தியல்க ளையும், இன்ன பிற அயன்மைக் கூறுகளையும் கொண்டவை. ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகள்:

| | | |
|---|---|---|
| ***அஷ்டகம்*** | ***தூஷணம்*** | ***சமரதி*** |
| ***சங்காரம்*** | ***தாஷ்டிகம்*** | ***அஜபை*** |
| ***சஷ்டி*** | ***தூர்த்தனம்*** | ***அஷ்டவசு*** |
| ***சைத்தியம்*** | ***புருஷமேதம்*** | ***அஷ்டகை*** |
| | | ***அஷ்டஸகஸ்ரம்*** |

சொற்பொருள் வகையில் ஐம்பது விழுக்காட்டுக்கு அதிகமானவை மிகப் பெரும்பான்மைப் பயனர்களுக்கு அந்நியமான சமற்கிருதச் சொற்கள். எடுத்துக்காட்டுகள்:

***ஆத்தன் - இஷ்டன்***
***ஆதுலன் - அசத்தன்***
***ஆமென் - ததாஸ்து***
***இடைபொடிவு - அவாந்தர சங்காரம்***
***உத்தரக்கிரியை - அமரக்கிரியை***
***கருமயோகம் -நிஷ்காமியமான கருமானுஷ்டம்***
***கல்லெடுப்பு - பாஷானோத்து வாசனம்***
***கலங்கரை விளக்கம்- தீபஸ்தம்பம்***
***கற்பனை - அத்தியாசம்***
***குளிர்ச்சி - சைத்தியோபசாரம்***
***நிதம்பம் - பிருஷ்டம்***
***நிந்தனை - தூஷணை***

மூன்றாவதாக, சாதீயம் Lexicon–இல் புரையோடியிருக்கக் காணலாம், எடுத்துக் காட்டுகள்:

* ***அமர்*** ஏற்றதாகு (*குலத்திற்கு அமர்ந்த தொழில்*)
* ***இயல்*** ஒழுக்கம் conduct appropriate to one's caste
* ***அகலன்*** தீண்டாதவன் a member of the untouchable caste
* ***ஆதிவருணம்*** first caste; brahmins
* ***ஆதிபாஷை*** சமஸ்கிருதம் Sanskrit
* **தின்னாச்சாதி** உடன் உண்ணுதற்குத் தகுதியற்ற சாதி low caste with whose members commensality is prohibited
* **அறவிலை அறம்** நால் வருணத்தாரும் தத்தம் நெறியில் பிழையாதவாறு அரசன் காத்தல்
* **சிறப்பு** feeding of a brahmin at a temple festival

நான்காவதாக, தமிழில் உறுதிப் பொருள்கள் மூன்றாகத் தொல்காப்பியம் கூற, அதனை விடுத்து நன்னூல் கூறும் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கைப் பதிவுசெய்யும் இந்த Lexicon. இது போன்ற தமிழ்ப் பண்பாட்டுச் சிதைவுகள் எண்ணிலடங்காதவை, இவையேயன்றி வடமொழிப் புராண மூட நம்பிக்கைகள் எங்கும் விரவிவரக் காணலாம். முதல்நூல், வழிநூலில் முதல்நூலை இயற்றியது இறைவன் என்கிறது Lexicon.

ஐந்தாவதாக, தமிழ் மொழியின் ஒருதனிக் கட்டளை இலக்கணமான தொல்காப்பியம் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு, சமற்கிருத மயமாக்கப்பட்டுள்ள நன்னூல் உயர்த்திப் பிடிக்கப்பட்டுள்ள Tamil Lexicon தமிழுக்கான ஓர் அகராதி ஆக முடியாது. தொல்காப்பியத்தின் ***'வடசொற் கிளவி வட எழுத்து ஒரீஇ'*** என்னும் கட்டளை நியதி தொடங்கி பெயர், வினை, உரி, இடை என்னும் சொல் வகைமை ஊடாக, தொல்காப்பியர் அகராதியியல் மேலைக் கருத்தாக்கங்களுக்கு இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பாக வகுத்தளித்த அகராதி ஆக்க உள்ளொளிகள் *Tamil Lexicon*-இல் முற்றிலும் புறந்தள்ளப்பட்டுள்ளது கண்கூடு, சொல்லிலக்கணத்திற்கு *Lexicon* etymology எனப் பொருள் தந்துள்ளதை நோக்குக.

இஃது இவ்வாறு இருக்க, இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உருவாக்கப் பட்டு இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட மறு அச்சீடுகளை (impressions/reprints)யும் மூன்று பதிப்புகளையும் கண்டுள்ள *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி* இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது குறிப்பிடத்தக்க திறத்தொழில் அகரமுதலியாகும் (professionally compiled dictionary). Lexicon-ஐப் போலவே இதன் அடிப்படை உட்கோளும் தமிழைத் தாழ்த்தி சமற்கிருதத்தை உயர்த்திப் பிடிப்பதே. இதன் தலைச்சொற்களையும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் தரப் பட்டுள்ள பாங்கையும் நோக்குக.

| | |
|---|---|
| ***அனுஷ்டானம்*** | ***பாஷ்யம்*** |
| ***அஷ்ட தரித்திரம்*** | ***பாஷாணம்*** |
| ***அனுஷ்டி*** | ***பாஷை*** |
| ***அஜீரணம்*** | ***பூஜ்யஸ்ரீ*** |
| ***அஷ்ட கோணல்*** | ***பூஜி*** |
| ***அஷ்டதிக்கு பாலகர்*** | ***புஜம்*** |
| ***அஸ்தியில் ஜுரம்*** | ***புஷ்பம்*** |
| ***அஷ்டமத்து சனி*** | ***புஷ்டி*** |
| | ***புஷ்பவதி*** |

***இதயம்*** பெ. காண்க **இருதயம்**

*உப்புசப்பு* பெ. சுவாரஸ்யம்

*உறுதிப்பொருள்* பெ. அறம், பொருள், இன்பம், வீடு

*வேதாந்தம்* பெ. உபநிடதம், கீதை, பிரம்ம சூத்திரம் ஆகியவற்றை அடிப் படை நூல்களாக ஏற்றுக்கொண்ட இந்தியத் தத்துவ மரபின் தரிசனங்களில் ஒன்று

இவ்வாறாக, மிகப்பலப் பார்ப்பனியக் கருத்தியல்களைத் தமிழ்ப் பண்பாட்டின் மீது திணிப்பதற்காக உருவாக்கப்பட்டது க்ரியா எனும் 'நற்றமிழ்' பெயர் தாங்கிய இந்த அகரமுதலி.

## இறுதியாக

*தமிழ்-தமிழ் அகரமுதலி* என்ற பெயரில் தமிழ்ப் பெருமகன் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ள அகராதியைக் குறிப்பிட்டாக வேண்டும். இதிலுள்ள பதிவுகள் தமிழ்ப் பண்பாட் டைச் சிதைக்கும் நோக்கிலானவை என்பது மட்டுமன்றி அகராதி ஆக்க நெறிமுறைகளை முற்றிலும் புறந்தள்ளி யுள்ளது கண்கூடு. இதன் தலைச் சொற்களுக்கு இலக்கணக் குறிப்பே தரப்படவில்லை என்பது இதன் பயன் பாட்டைச் சுருக்கிவிடும் என்பதோடு, எது பெயர், எது வினை, எது இடை, எது உரி என இனங்காண வகையே இல்லை இதில். இதன் பதிவுகளை நோக்குக.

*கங்காசுதன்* *வேதகீதன்*
*கங்காதரன்* *வேதஞ்ஞன்*
*கங்காதேவி* *வேதசாரம்*
*கங்காள மாலி* *வேதநீயம்*
*கங்காளன்* *வேதபாரகன்*
*கங்காளி* *வேத வித்தகன*
*கங்கை (சிவன் மனைவி)* *வேதா*
*கங்கைக் கோத்திரம்* *வேதாதி*
*கங்கை மைந்தன்* *வேதாதிவண்ணன்*
*கங்கை வேணியன்* *வேதி*
*புருகூதன் (இந்திரன்)* *வேதவித்து*
*புருடாயிதம் (புணர்ச்சிவகை* *வேதவேதாந்தன்*
*புரோடாசம் (வேள்வித்தீயில் இடும் அரிசிமா)* *வேதபாராயணம்*
*வேதபிரான்*
*வேதவிருத்தி*
*வேதன்*

இந்த மூன்று அகராதிகளும் தமிழ்மொழி அகராதிகள் அல்ல என்பது வெள்ளிடை மலை.

இனி நாம் செய்ய வேண்டியது யாது? ஒரு முழுமையான, தமிழ்ச் சான்றுகள் மீது கட்டமைக்கப்பட்ட வரலாற்றுமுறை அகராதியே நமது இன்றைய இன்றிய மையாத அடிப்படைத் தேவை. இதன் முன்வடிவாக OUP ஒரு தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதியை உருவாக்கியுள்ளது. பேராசிரியர் மருதநாயகம் அறிவுரையா ளராகவும் இக்கட்டுரை ஆசிரியர் தொகுப்பாளராகவும் வினையாற்றியு ள்ள இந்த நுண்ணகராதி மெய்ப்புத் திருத்த நிலையில் உள்ளது. செப்டெம்பர் 2025இல் வெளியிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

## இனி நிகழ வேண்டியவையாவது

ஒரு மொழியின் இலக்கியச் செழுமை க்கும் கருத்தியல் வன்மைக்கும் தொடர் பாடல் திறத்திற்கும் உரைகல்லாக அமைவது அம்மொழியில் பயிலும் சொற்களின் வீச்சும் செறிவும் ஆழமுமே. மொழியியல் சார்புடைமைக் கோட்பாடு (linguistic relativity) புகல்வதை நோக்குக: ஒருவருடைய சிந்தனையின் வீச்சை அறுதியிடக் கூடியதாக அமைவது அவருக்கு அவருடைய மொழி வழங்கும் சொற்களின் வீச்சாகும். இதுவேயன்றி, ஒரு மக்கள் இனத்தின் பண்பாட்டுக் கருத்தியலும் சூழலியல் கோட்பாடும் இலக்கிய ஆக்கமும் இன்ன பிறவும் அவர்தம் மொழியின் சொற்களிலேயே கட்டடமைக்கப்படுகின்றன, எனவே விரிவான, முழுமையான ஓர் அகராதி யின் தேவை Tamil Lexicon, க்ரியா அகராதி முதலிய சமரசங்களுக்கு அப்பாற்பட்டது.

நமது உயராய்வு நிறுவனங்கள் இதனை உணர்ந்து பட்டய நிலை அகராதியியல் பயிற்சிகள் அளிப்பதோடு, அகராதியிய லையும் மொழிபெயர்ப்பியலையும் தம் முதுகலைப் பட்டப்படிப்பில் ஒரு பாடமாகச் சேர்த்தல் வேண்டும்.

மேலை நாடுகளுக்கு இருபது நூற்றாண்டு களுக்கு முன்னரே மொழியியல் பேராசான் என எ. கே. இராமானுசனும் பெக்கரும் இன்ன பிற அறிஞர்களும் விதந்தரைக்கும் தொல்காப்பியர் மிக விரிவான அகராதியியல் கோட்பாடுக ளையும் பயில்முறைகளையும் வகுத்தளி த்துள்ளார் என்பதை நம்மவர் உணர்ந்து அவற்றின் அடிப்படையில் அகராதிப் பணிகள் இயற்றப்படல் வேண்டும்.

அகராதியியல்சார் தொல்காப்பிய உள்ளொளிகள் பற்றிய சிறு குறிப்புடன் இக்கட்டுரை நிறைவுபெறுகிறது.

அகராதியைத் “தொகுத்தல், விரித்தல், தொகைவிரி“ என ஒரு வழிநூலாகக் காண்பதில் தொடங்கி, பெயர்ச்சொல் லையும் வினைச்சொல்லையும் முதன்மைச் சொல் வகைகளாகவும் உரிச்சொல்லையும் இடைச்சொல்லையும் சார்புநிலை வகை களாகவும் காண்பதன் ஊடாகத் தொல்காப்பியர் மிகச் சிறந்த, இற்றைப்பாடுடைய வழிகாட்டுதல்களை வழங்குகிறார்.

பின்வரும் நூற்பாக்கள் அகராதியியலின் மாறாத் தகைமை வாய்ந்த அடிப் படைகளாகும்:

*எல்லாச் சொல்லும் பொருள்*
*குறித்தனவே.* (640)
*பொருண்மை தெரிதலும் சொன்மை*
*தெரிதலும்*
*சொல்லின் ஆகும் என்மனார் புலவர்* (641)
*தெரிபுவேறு நிலையலும் குறிப்பில்*
*தோன்றலும்*
*இருபாற்று என்ப பொருண்மை*
*நிலையே.* (642)
*எழுத்தொடும் சொல்லொடும்*
*புணராதாகி*
*பொருட்புறத்ததுவே குறிப்பு மொழியே.*
(1428)

கீழ்க்காணும் இரண்டு நூற்பாக்களும் அகராதிப் பொருள் வரையரை எழுது வோருக்கு முதற் கோட்பாடுகளாகும்.

*இயற்கைப் பொருளை இற்று எனக்*
*கிளத்தல்.* (502)
*செயற்கைப் பொருளை ஆக்கமொடு*
*கூறல்.* (503)

பின்வரும் நூற்பா பொருள் வரையறை யின் அடிப்படை இலக்கணமாக அமைவது:

*பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித்*
*தம்தம் மரபில் சென்றுநிலை மருங்கின்*
*எச்சொல் ஆயினும் பொருள்வேறு*
*கிளத்தல்.* (782)

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் (880) என்பன அகராதிக்கான சொற்றொகையாக அமையும் என்பதும் ஆறு வகையான தொகைச்சொற்கள் அகராதி தலைச்சொற்களாகும் தகுதி வாய்ந்த என்பதும் (ஒருசொல் நடைய 895, 903) தொகைச்சொற்களுக்குப் பொருள் வரையும்போது கவனத்தில் கொள்ள வேண்டியது முதல் உறுப்பா, இரண்டாவது உறுப்பா, இரண்டுமேவா, இரண்டுமல்லாது அல்மொழியா(902) எனத் தொல்காப்பியர் விளக்குவதும் உலகப் பொதுமையை நோக்கிய அகராதியியல் வழிகாட்டு நெறிமுறைகள்.

சொற்பொருளை அறுதிசெய்வதில் மனதில் கொள்ளவேண்டிய மொழிச் சூழல், பார்வைச்சூழல் (verbal context, referential context) இரண்டையும் நுட்பமாகப் பேசுவார் தொல்காப்பியர்:

*மெய்பெறக் கிளந்து உரிச்சொல் எல்லாம்*
*முன்னும் பின்னும் வருபவை நாடி*
*ஒத்த மொழியான் புணர்ந்தனர்*
*உணர்த்தல்*
*தம்தம் மரபில் தோன்றுமன் பொருளே.*
(872)

* * *

ஒருசொல் பலபொருளும், ஒருபொருள் பன்மொழியும் பெருகிக் காணப்படும் தமிழுக்கு இணைப்பொருள் சொற்களஞ்சியம் (Thesaurus) மற்றுமொரு விடுதல் வேண்டாத் தேவையாகும். A Dictionary of Tamil Literature எனப்படும் இலக்கிய அகராதி இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட பொய்யுரைகளுக்கு மறு மொழியாக அமையக்கூடும்.